# 2018–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11–ஆம் தேதி (11.10.2018) வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்.

**1.** மாநகராட்சிகள், நகராட்சிகள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சொத்துக்களுக்கு அரசாணை (எம்.எஸ்) எண். 73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள். 19.07.2018 மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள். 26.07.2018–ல் 01.04.2018 முதல் புதிய சொத்துவரி சீராய்வு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் 01.04.2018 முதல் சொத்துவரி பொதுச் சீராய்வு (Quinquennial Revision) செய்வது குறித்து வரப்பெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 20.08.2018 மற்றும் 21.08.2018–ம் தேதிய சுற்றறிக்கை, கடிதம் ந.க.எண். 20555/2018/ஆர்1–ல் தெரிவித்துள்ள அறிவுரைகளின்படியும் மண்டலம் மற்றும் மண்டல மதிப்பு (Zonal value) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதற்கு, ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் எண். 126, நாள். 05.09.2018–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மண்டலம் விவரம் மற்றும் மண்டல மதிப்பு (Zonal value) உயர்வு செய்யப்பட்ட விவரத்தினை பொதுமக்கள் அறியும் வண்ணம் இம்மாநகராட்சி இணையதளம் மற்றும் 11.09.2018–ம் தேதிய மாலைமலர் நாளிதழிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் ஆட்சேபனை ஏதும் இருப்பின் 30 நாட்களுக்குள் மாநகராட்சி அலுவலகத்தில் தெரிவிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. 30 நாட்கள் கடந்த நிலையில் ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை.

எனவே மேற்படி மண்டல விவரம் மற்றும் மண்டல மதிப்பினை ஊர்ஜிதம் செய்து மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்வதற்கும், அதற்காகும் செலவினத்திற்கும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அனுமதிக்கலாம். (அ1/3935/2017)

**143. அனுமதிக்கப்பட்டது.**

**2.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி. ரோட்டில் அமைந்துள்ள கீழ்க்கண்டுள்ள கடைகளை அதன் உரிமதாரர்கள் அரசாணை எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 03.07.2007–ன்படி மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை மிக அதிகமாக உள்ளதால், வாடகை செலுத்த முடியாத காரணத்தாலும், வியாபார சூழ்நிலைகளால் தொடர்ந்து கடையினை நடத்த இயலாததால் 30.09.2018 மற்றும் ஆர்.கே.வி. ரோடு முதல் தளம் லூம் வேல்டு கடை எண். 7, 8–ஐ 31.10.2018 உடன் இம்மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாக கடிதம் கொடுத்துள்ளார்கள்.

| வ. எண். | கடை எண் | உரிமதாரர் பெயர் |
|---|---|---|
| 1. | ஆர்.கே.வி. ரோடு லைன் கடை எண். CW2 | திரு. என். பகவதி |
| 2. | ஆர்.கே.வி. ரோடு லைன் கடை எண். CW3 | திரு. என். பகவதி |
| 3. | ஆர்.கே.வி. ரோடு லைன் கடை எண். CW4 | திரு. என். பகவதி |
| 4. | ஆர்.கே.வி. ரோடு லைன் கடை எண். CW8 | திரு. எம். மணி |
| 5. | ஆர்.கே.வி. ரோடு உட்புறக் கடை எண். 3 | திருமதி. ஆர். மாதேஸ்வரி |
| 6. | ஆர்.கே.வி. ரோடு உட்புறக் கடை எண். 12 | திரு. என். பகவதி |

| | | |
|---|---|---|
| 7. | ஆர்.கே.வி. ரோடு உட்புறக் கடை எண். 13 | திரு. என். பகவதி |
| 8. | ஆர்.கே.வி. ரோடு உட்புறக் கடை எண். 17 | திரு. என். சின்னசாமி |
| 9. | ஆர்.கே.வி. ரோடு உட்புறக் கடை எண். 22 | திருமதி. ஆர். மாதேஸ்வரி |
| 10. | ஆர்.கே.வி. ரோடு முதல் தளம் லூம் வேல்டு கடை எண். 7 | திரு. ஆர். அரவிந்த் |
| 11. | ஆர்.கே.வி. ரோடு முதல் தளம் லூம் வேல்டு கடை எண். 8 | திருமதி. பி.கே.பி. ராஜலட்சுமி |

மேற்படி கடைகளின் உரிமத்தை ரத்து செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அவசர அவசியத்தை முன்னிட்டு உடன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி மேற்படி கடைகளை உடன் ஒப்படைக்க வேண்டியுள்ளதால் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**144. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

3. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் (மேற்குபுறம்) கடை எண். 10–ன் உரிமதாரர் திருமதி. கே.எஸ். ஷாலினி என்பவர் மேற்படி கடையினை இம்மாநகராட்சி வசம் ஒப்படைக்க கடிதம் கொடுத்துள்ளார்.

ஆகவே பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் (மேற்குபுறம்) கடை எண். 10–ன் உரிமத்தை ரத்து செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அவசர அவசியத்தை முன்னிட்டு உடன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி மேற்படி கடையினை உடன் ஒப்படைக்க வேண்டியுள்ளதால் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**145. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**4. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள ஆர்.கே.வி. ரோட்டில் அமைந்துள்ள வணிக வளாக கடைகளுக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 05.10.2018 அன்று நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு:**

| வ. எண். | ஏல இனம் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏலதாரர் பெயர் திரு./திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் திரு. /திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | ஆர்.கே.வி. ரோடு (லைன் கடை) தரைத் தளக் கடை எண். CW2 | **பி. உதயகுமார்** | **1360-** | எம். கோபிநாத் | 1220- |
| 2. | ஆர்.கே.வி. ரோடு (லைன் கடை) தரைத் தளக் கடை | **பி. உதயகுமார்** | **1370-** | எஸ். முகமது யாசின் | 1260- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எண். CW3 | | | | |
| 3. | ஆர்.கே.வி. ரோடு (லைன் கடை) தரைத் தளக் கடை எண். CW4 | **பி. உதயகுமார்** | **1380-** | ஏ. கோபாலகிருஷ்ணன் | 1265- |
| 4. | ஆர்.கே.வி. ரோடு (லைன் கடை) தரைத் தளக் கடை எண். CW8 | **எம். கலைமணி** | **1950-** | எஸ். குணசேகரன் | 1850- |
| 5. | ஆர்.கே.வி. ரோடு (உட்புறக் கடை) தரைத் தளக் கடை எண். 3 | பி. கோவிந்தராஜுலு | 940- | **ஆர். யுவராஜ்** | **1020-** |
| 6. | ஆர்.கே.வி. ரோடு (உட்புறக் கடை) தரைத் தளக் கடை எண். 12 | ஆர். பிரவின் | 930- | **பி. உதயகுமார்** | **1040-** |
| 7. | ஆர்.கே.வி. ரோடு (உட்புறக் கடை) தரைத் தளக் கடை எண். 13 | ரா. ராமச்சந்திரன் | 935- | **பி. உதயகுமார்** | **1045-** |
| 8. | ஆர்.கே.வி. ரோடு (உட்புறக் கடை) தரைத் தளக் கடை எண். 17 | E.M.C. விமல்குமார் | 930- | **பி. பெரியசாமி** | **1020-** |
| 9. | ஆர்.கே.வி. ரோடு (உட்புறக் கடை) தரைத் தளக் கடை எண். 22 | என். ஜெகதீசன் | 960- | **ஆர். யுவராஜ்** | **1030-** |
| 10. | ஆர்.கே.வி. ரோடு (லூம் வேல்டு) முதல் தளக் கடை எண். 7 | வி.பி. கண்ணன் | 4900- | **பி. சுரேஷ்குமார்** | **5800-** |
| 11. | ஆர்.கே.வி. ரோடு (லூம் வேல்டு) முதல் தளக் கடை எண். 8 | வி.பி. கண்ணன் | 3350- | **பி. சுரேஷ்குமார்** | **3500-** |
| 12. | பேருந்து நிலைய வணிக வளாக (மேற்குபுறம்) முதல் தளக் கடை எண். 10 | **ஏ.பி. நல்லசிவம்** | **5550-** | எஸ்.கே. ராகுல் | 5100- |

ஆர்.கே.வி. ரோடு (லைன் கடை) தரைத் தளக் கடை எண். CW2, CW3, CW4, CW8, ஆர்.கே.வி. ரோடு (உட்புறக் கடை) தரைத் தளக் கடை எண். 3, 12, 13, 17, 22, ஆர்.கே.வி. ரோடு (லூம் வேல்டு) முதல் தளக் கடை எண். 7, 8 மற்றும் பேருந்து நிலைய வணிக வளாக (மேற்குபுறம்) முதல் தளக் கடை எண். 10 ஆகிய கடைகளுக்கு மேற்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்.

மேற்படி ஏல இனங்களுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகையினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மேற்கண்டுள்ளவாறு ஆர்.கே.வி. ரோடு (லைன் கடை) தரைத் தளக் கடை எண். CW2, CW3, CW4, CW8, ஆர்.கே.வி. ரோடு (உட்புறக் கடை) தரைத் தளக் கடை எண். 3, 12, 13, 17, 22, ஆர்.கே.வி. ரோடு (லூம் வேல்டு) முதல் தளக் கடை எண். 7, 8 ஆகிய கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரியவர்களுக்கு 01.10.2018 முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கும், பேருந்து நிலைய வணிக வளாக (மேற்குபுறம்) முதல் தளக் கடை எண். 10 கடைக்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரியவருக்கு 01.11.2018 முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**146.** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**5.** ஈரோடு மாநகராட்சி மண்டலம் **1** சூரியம்பாளையம் பேரூராட்சி வீரப்பன்சத்திரம் மூன்றாம் நிலை நகராட்சியில் ஒப்பந்ததாரராக பணிபுரிந்த திரு.சி.கோபி செலுத்தியுள்ள டேவணித் தொகை மற்றும் வேலையில் பிடித்தம் செய்த (A.S.D) தொகைகளை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

மேற்கண்ட வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத்தொகைக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதால், தொகை ரூ.2,48,579–ஐ ஒப்பந்ததாரர் திரு.கோபி என்பவருக்கு வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

அனுமதி வழங்கலாம். கோப்பு எண்.இ1/1317/2018

**147. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**6.** ஈரோடு பதிவு மாவட்டம், சூரம்பட்டி சார்பதிவு மாவட்டம் ஈரோடு வட்டம், ஈரோடு முனிசிபல் லிமிட்டுக்கு வெளிப்புறம், முத்தம்பாளையம் கிராமம், பட்டா எண். **193**, பழைய க.ச.**87/1**, இதற்கு புதிய ரீ.சர்வே எண். **147/2** நெ.பு.ஹெ. **0.33.0**.க்கு த.ரூ. **0.91** இதற்கு பு.ஏ. **0.83 1/2** சென்ட் விஸ்தீரண பூமியில் தென்வடலாக ரோடு ஏற்படுத்தி மனைநிலங்களாகப் பிரிவினை செய்து ‘‘ஸ்ரீ திருமலா கார்டன் நகர்‘‘ எனப் பெயர் வைத்துள்ளதில், உள்ள மனைநிலங்களை வரன்முறைப்படுத்தி சேலம் மண்டலம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களிடம் மனு செய்து அதன்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களின் ந.க.எண். **626/2018** சே.ம.–**3** நாள். **14.08.2018**–ன் படி மேற்படி மனைப்பிரிவிற்கு ம.வ./ம.(சே). எண். **691/2018**, வரன்முறை மனைப்பிரிவு எண். **578/2018**–ம் எண்ணாக ஒப்புதல் வழங்கப்பட்டு லே–அவுட் அங்கீகாரம் பெற்றுள்ளதில், உள்ள ரோடு வகையறா மற்றும் பூங்காக்கள் ஆகியவைகளுக்கு செக்குப்பந்தி.

**23 அடி அகல ரோட்டுக்குச் செக்குப்பந்தி.**

**30** அடி அகல நிலையிலுள்ள சாலைக்கும் – தெற்கு, வீட்டுமனை எண்கள். **14,11,10,9,8,7**, மற்றும் அடியிற்கண்ட பூங்கா –**3**க்கும் – மேற்கு, சின்னசாமி வகையறா வசமுள்ள பூமிக்கும் – வடக்கு, வீட்டுமனை எண்கள். **2,3,4,5** மற்றும் அடியிற்கண்ட பூங்கா –**1,2** க்கும் –கிழக்கு இதன் மத்தியில் தென்வடலாக கிழபுறம் **180’9‘‘** அடிகளும், மேல்புறம் **177’5‘‘** அடிகளும், கிழமேலாக இருபுறமும் தலா **23** அடிகளும், இந்தவகை அளவுள்ள (**382.90** சதுர மீட்டர்களும்) **4121 1/2** சதுர அடிகள் கொண்ட **23** அடி அகல தென்வடல் நீள ரோடு இது பூராவும், இதுவும் , பின்னும், ஏற்கனவே நிலையிலுள்ள சாலையை விரிவுபடுத்த ஏற்படுத்தப்பட்டுள்ள ரோட்டுக்குச் செக்குப்பந்தி.

ஏற்கனவே நிலையிலுள்ள சாலைக்கும் – தெற்கு, ஏற்கனவே நிலையிலுள்ள சாலைக்கும் – மேற்கு, சின்னசாமி வகையறா வசமுள்ள பூமிக்கும் – வடக்கு, வீட்டுமனை எண்கள். **16** to 21 -க்கும் –கிழக்கு,

இதன் மத்தியில் தென்வடலாக கிழபுறம் **196’8‘‘** அடிகளும், மேல்புறம் **196’8‘‘** அடிகளும், கிழமேலாக வடபுறம் **13** அடிகளும், தென்புறம் **5** அடிகளும், இந்தவகை அளவுள்ள (**254.32** சதுர மீட்டர்கள்) **2737 1/2** சதுர அடிகள் கொண்ட தென்வடல் நீள ரோடு இது பூராவும், இதுவும், பின்னும்,

**பூங்கா – 1க்குச் செக்குப்பந்தி.**

30 அடி அகல தென்வடல் நீள ரோட்டுக்கும், ரீ.ச. 142/1B Part நெ. காலைக்கும் – தெற்கு, 23 அடி அகல தென்வடல் ரோட்டுக்கும் – மேற்கு, வீட்டுமனை எண். 2க்கும் – வடக்கு, ரீ.ச. 142/1B Part நெ. காலை பூமிக்கும் –கிழக்கு,

இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 18'3'' அடிகளும், தென்புறம் 36' 8'' தென்வடலாக கிழபுறம் 34' 9'' அடிகளும், மேல்புறம் கிராசாக 39 அடிகளும், இந்தவகை அளவுள்ள (87.88 சதுர மீட்டர்கள்) 946 சதுர அடிகள் கொண்ட பூங்கா –1 இதுவும், பின்னும்,

**பூங்கா – 2க்குச் செக்குப்பந்தி.**

23 அடி அகல தென்வடல் ரோட்டுக்கும் – மேற்கு, சின்னசாமி வகையறா வசமுள்ள பூமிக்கும் – வடக்கு, ரீ.ச. 142 நெ. காலை பூமிக்கும் – கிழக்கு, வீட்டுமனை எண். 5–க்கும் – தெற்கு,

இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 52'9'' அடிகளும், தென்புறம் 55'3'' தென்வடலாக கிழபுறம் 27'6'' அடிகளும், மேல்புறம் 21 அடிகளும், இந்த வகை அளவுள்ள (121.24 சதுர மீட்டர்கள்) 1305 சதுர அடிகள் கொண்ட பூங்கா – 2 இதுவும், பின்னும்,

**பூங்கா – 3க்குச் செக்குப்பந்தி.**

23 அடி அகல தென்வடல் ரோட்டுக்கும் – கிழக்கு, வீட்டுமனை எண். 7–க்கும் – தெற்கு, வீட்டுமனை எண். 21–க்கும் – மேற்கு, சின்னசாமி வகையறா வசமுள்ள பூமிக்கும் – வடக்கு,

இதன்மத்தியில் கிழமேலாக வடபுறம் 50 அடிகளும், தென்புறம் 53'2'' தென்வடலாக கிழபுறம் 10'1'' அடிகளும் , மேல்புறம் 4 அடிகளும், இந்த வகை அளவுள்ள ( 32.52 சதுர மீட்டர்கள்) 350 சதுர அடிகள் கொண்ட பூங்கா –3 இதுவும்,

ஆகக்கூடும் ( 878.85 சதுர மீட்டர்கள்) 9460 சதுரடிகள் கொண்ட ரோடு வகையறாக்கள், மற்றும் பூங்காக்கள் பூராவும். மேலேகண்ட 23 அடி அகல தென்வடல் நீள ரோடு பூராவும், இதற்குரிய ரோடுகளின் பொது உபயோகபாத்தியங்கள் சகிதமும் சேர்ந்தது.

மேற்படி சொத்தின் வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டு உள்ளது.

மேற்படி சொத்து முத்தம்பாளையம் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டது. தற்போது ஈரோடு மாநகராட்சி எல்லைக்குட்பட்டது

மேற்கண்ட சாலை இடங்கள் ஈரோடு மாநகராட்சிக்கு 24.09.2018 அன்று சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் தான சாசனம் பத்திர எண். 2936 / 2018 பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டள்ளது. எனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள சாலைகளை ஈரோடு மாநகராட்சி எடுத்துக் கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். இ2/2884 /2018

**148. <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

7. ஈரோடு பதிவு மாவட்டம், சூரம்பட்டி சார்பதிவு மாவட்டம் , ஈரோடு வட்டம், வில்லரசம்பட்டி கிராமம், பழைய க.ச.460, இதற்கு புதிய ரீ.சர்வே எண். 27/2 (பு.ஹெ. 0.01.5), பட்டா எண். 460, பழைய க.ச.351, இதற்கு புதிய ரீ.சர்வே எண். 27/3 பு.ஹெ. 0.83.5, பட்டா எண். 351, பழைய க.ச. 351 புதிய ரீ.சர்வே எண். 27/5 பட்டா எண். 351, பு.ஹெ. 0.11.5 இதில், மேற்படி கிரய ஆவணத்தின்படி பாத்தியப்பட்ட பு.ஏ. 0.42 1/2 செண்ட் விஸ்தீரண பூமியில் ரோடுகள் ஏற்படுத்தி மனைநிலங்களாகப் பிரிவினை செய்து ''ஸ்ரீ காவேரி நகர்'' எனப் பெயர் வைத்துள்ளதில், உள்ள மனைநிலங்களை வரன் முறைப்படுத்தி சேலம் மண்டலம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களிடம் மனு செய்து அதன்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களின் ந.க.எண். 167/2018 சே.ம.–3 நாள். 14.08.2018–ன் படி மேற்படி மனைப்பிரிவிற்கு ம.வ./ம.(சே). எண். 692/2018, வரன் முறை மனைப்பிரிவு எண். 579/2018–ம் எண்ணாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதின்படி லே –அவுட் அங்கீகாரம் பெற்றுள்ளதில், பூங்காவிற்குச் செக்குப்பந்தி.

நகராட்சிக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட 23 அடி அகல கிழமேல் ரோட்டுக்கும் – தெற்கு, வீட்டுமனை எண். 12–க்கும் – மேற்கு, ரீ.ச.25 நெ. காலைக்கும் – வடக்கு, வேறு நபர் பாக சொத்துக்கும் – கிழக்கு, இதன் மத்தியில் தென் வடலாக கிழபுறம் 39'1'' அடிகளும், மேல்புறம் 44 அடிகளும், கிழமேலாக வடபுறம் 28' 6'' அடிகளும், தென்புறம் 33'3'' அடிகளும், இந்தவகை அளவுள்ள (117.99 சதுர மீட்டர்கள் ) 1270 சதுர அடிகள் கொண்ட பூங்கா பூராவும். இதற்குரிய ரோடுகளின் பொது உபயோக பாத்தியங்கள் சகிதமும் சேர்ந்தது.

மேற்படி சொத்துக்கு ரீ.சர்வே எண். 27/3. க்கு கட்டுப்பட்டது. மேற்படி சொத்தின் வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டு உள்ளது. மேற்படி சொத்து வில்லரசம்பட்டி பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டது. தற்போது ஈரோடு மாநகராட்சி எல்லைக்குட்பட்டது.

மேற்கண்ட சாலை இடங்கள் ஈரோடு மாநகராட்சிக்கு 18.09.2018 அன்று சம்ம சார்பதிவாளர் அலுவலகத்தில் தான சாசனம் பத்திர எண். 2881 / 2018 பத்திரம் மூலம் பதிவு செ ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டள்ளது. எனவே ஒ செய்யப்பட்டுள்ள சாலைகளை ஈரோடு மாநகராட்சி எடுத்துக் கொள்ள மன்றம் வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு :**

மன்றம்அனுமதிக்கலாம்.

கோப்பு எண். இ2/2879 /2018

**149. அனுமதிக்கப்பட்டது.**

8. ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோடு மாநகராட்சி, குமிளம்பரப்பு கிராமம் ரீ.ச.எண்.81/2A part, 2Bpart,6,7,8,9,10,11,12,13,14–ல் மொத்தம் பு.ஏ.3.77¼ செண்ட் பூமி பூராவும், வீட்டுமனைகளாக பிரிவினை செய்து "டெலிபோன் நகர் மேற்கு" என பெயர் வைத்து விற்பனை செய்து வந்ததில் அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017, திட்டத்தின் கீழ்சித்தோடு புதுநகர்வளர்ச்சி குழுமம், ஈரோடு ந.க.எண்.154/2018 நாள். 14.06.2018–ன்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி பெற்று வரன்முறை செய்யப்பட்ட ம.வ (வரன்முறை) சிபுநவகு எண்.07/2018 என எண்ணிடப்பட்டு உறுப்பினர் செயலர்(பொ) அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட சைட் எண்.1A,1B,2 to 5 போக பாக்கியுள்ள சைட் எண்கள் 6 to 51 வீட்டுமனையில் தற்போது ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக கொடுக்கும் ரோடுகள், மற்றும் பூங்காக்கள் அதன் அளவுகள்:-

அயிட்டம்:1

<u>22 அடி அகல கிழமேல் மனைபிரிவு சாலைக்கும் செக்குபந்தி அளவுகள்:–</u>

சித்தோடு டூ பவானி செல்லும் மெயின் ரோட்டுக்கும் (கிழக்கு), ரீ.ச.எண் 81/6 டூ 14 நெ காலைகளில் விடப்பட்டிருக்கும் 25' அடி அகல தென்வடல் ரோட்டுக்கும் (மேற்கு), மணியக்காரர் பழைய வீட்டுக்கும், முத்துச்சாமிகவுண்டர் காலியிடத்துக்கும், K.M.சுரேஷ்பாபு கிரயம் பெற்ற காலியிடத்துக்கும் (தெற்கு), சசிக்குமார் கிரயம் பெற்ற காலியிடத்துக்கும், S.தேவி, E.கலாசெங்கோட்டையன் ஆகியோர்கள் கிரயம் பெற்ற காலி இடங்களுக்கும்(வடக்கு), இதன் மத்தியில் கிழமேலடி இருபுறமும் 285' அடி, தென்வடலடி இருபுறமும் 22' அடி, இந்தளவுள்ள 6270 சதுரடிகள் கொண்ட ரோட்டு இடம் பூராவும்.

அயிட்டம்:2

<u>25 அடி தென்வடல் மனைபிரிவு சாலைக்கும் செக்குபந்தி அளவுகள்:–</u>

சைட் எண்.50–க்கும், சைட் எண்.51–க்கும் செங்கோட்டையன் கிரய பெற்றுக்கும் சைட் எண்.4–க்கும், பவானி மெயின் ரோட்டியிலிருந்து 22 அடி அகல கிழமேல் ரோட்டுக்கும், சைட் எண்.5–க்கும் (கிழக்கு), எங்கள் வசம் உள்ள இடத்துக்கும் (தெற்கு), ரீ.ச.எண்.80 காலையில் உள்ள ஓடைக்கும் (வடக்கு), சைட் எண்.38–க்கும் எங்களால் விடப்பட்டு இருக்கும் மனைப்பிரிவில் தெற்கு பகுதியில் அமைந்துள்ள கிழமேலடி மனைபிரிவு சாலைக்கும் சைட் எண்.29–க்கும் சைட் எண்.22–க்கும் எங்களால் விடப்பட்டிருக்கும் மனைபிரிவில் மத்தியில் கிழமேலடி மனைபிரிவு சாலைக்கும் சைட் எண்.15–க்கும் சைட் எண்.10–க்கும் எங்களால் விடப்பட்டு இருக்கும் மனைபிரிவின் வடபகுதியில் கிழமேலடி மனைபிரிவு சாலைக்கும் சைட் எண்.6–க்கும் சைட் (மேற்கு), தென்வடலடி மேற்புறம் 368.11' அடி, தென்வடலடி கிழபுறம் 387.3' அடி, கிழமேலடி இருபுறமும் 25' அடி, ஆக மொத்தம் சதுரடிகள் 9442 ¾ சதுரடிகள் கொண்ட ரோட்டு இடம் பூராவும்.

அயிட்டம்:3

மனைபிரிவின் தென்புற பகுதியில் கிழமேல் சாலையின் அளவுகளும் செக்குபந்திகள்:–

சைட் எண்கள். 38 டூ 49, இவைகளுக்கும், 3 நெம்பர் பூங்காவிற்கும் (வடக்கு), ரீ.ச.எண்.81/15 காலையில் வடக்கிலிருந்து தென்கிழக்காக செல்லும் ஓடைக்கும் ( மேற்கு), 2வது அயிட்ட 25 அடி அகல தென்வடல் ரோட்டுக்கும் (கிழக்கு), சைட் எண்கள் 29 முதல் 37 இவைகளுக்கும், 2 நெம்பர் பூங்கா இடத்துக்கும் (தெற்கு), இதன் மத்தியில் கிழமேலடி வடபுறம் 380.4' அடி, தென்புறம் 454' அடி, தென்வடலடி இருபுறமும் 25 அடி, ஆக மொத்த சதுரடிகள் 10429 சதுரடிகள் கொண்ட ரோட்டு இடம் பூராவும்

அயிட்டம்:4

மனைபிரிவின் மத்தியில் உள்ள கிழமேல் சாலைக்கு அளவுகளும் செக்குபந்திகள்:–

2–வது அயிட்ட 25 அடி அகல தென்வடல் ரோட்டுக்கும் (கிழக்கு), ரீ.ச.எண்81/15 காலையில்

வடக்கிலிருந்து தென்கிழக்காக செல்லும் ஓடைக்கும் (மேற்கு), சைட் எண்கள்.15 டு 21 இவைகளுக்கும் (தெற்கு), சைட் எண்கள்.22 டு 28 இவைகளுக்கும், 2 நெம்பர் பூங்கா இடத்துக்கும் (வடக்கு), இதன் மத்தியில் கிழமேலடி வடபுறம் 228.3' அடி, தென்புறம் 252' அடி, தென்வடலடி இருபுறமும் 25' அடி, ஆக மொத்தம் சதுரடிகள் 6003 ¾ சதுரடிகள் கொண்ட ரோட்டு இடம் பூராவும்.

அயிட்டம்:5

மனைபிரிவின் வடபுறம் உள்ள கிழமேல் சாலைக்கு அளவுகளும் செக்குபந்திகள்:—

2—வது அயிட்ட 25 அடி அகல தென்வடல் ரோட்டுக்கும் (கிழக்கு), ரீ.ச.எண்.81/15 காலையில் வடக்கிலிருந்து தென்கிழக்காக செல்லும் ஓடைக்கும் (மேற்கு), சைட் எண்கள்.6 டு 9 இவைகளுக்கும், 1 நெம்பர் பூங்காவிற்கும் (தெற்கு), சைட் எண்கள்.10 டு 14 இவைகளுக்கும் (வடக்கு), இதன் மத்தியில் கிழமேலடி வடபுறம் 157 ½' அடி, தென்புறம் 171' அடி, தென்வடலடி இருபுறமும் 25' அடி, ஆக மொத்த சதுரடிகள் 4106 1/4 ' சதுரடிகள் கொண்ட ரோட்டு இடம் பூராவும்.

ஆக மேலேகண்ட ஐந்து அயிட்ட ரோடுகளும் சேர்ந்து மொத்தம் 36,251 ¾ சதுரடிகள் கொண்ட ரோட்டு இடம் பூராவும்.

<u>அயிட்டம் 6,</u> 1 நெம்பர் பூங்கா இடத்துக்கு செக்குப்பந்தி மற்றும் அளவுகள் விபரம்:-

சைட் எண்.9—க்கும் (கிழக்கு) ரீ.ச.எண்.81/15 காலையில் வடக்கிலிருந்து தென்கிழக்காக செல்லும் ஓடைக்கும் (மேற்கு), மேலேகண்ட 4 அயிட்ட ரோட்டுக்கும் (வடக்கு), இதன் மத்தியில் முக்கோணவடிவமுள்ள இடத்துக்கு அளவுகள் கிழமேலடி தென்புறம் 37 ½' அடி தென்வடலடி கிழபுறம் 78 ½' அடி, தென்வடலடி மேற்புறம் 69' அடி, இந்தளவுள்ள 1293 ¾ சதுரடிகள் கொண்ட பூங்கா இடம் பூராவும்.

<u>அயிட்டம் 7,</u> 2 நெம்பர் பூங்கா இடத்துக்கு செக்குப்பந்தி மற்றும் அளவுகள் விபரம்:-

சைட் எண்.28 — க்கும் (கிழக்கு), ரீ.ச.எண்.81/15 காலையில் வடக்கிலிருந்து தென்கிழக்காக செல்லும் ஓடைக்கு (மேற்கு), சைட் எண்கள்.35 முதல் 37 க்கும் (வடக்கு) இதன் மத்தியில் முக்கோணவடிவமுள்ள இடத்துக்கு அளவுகள் கிழமேலடி தென்புறம் 65' அடி, தென்வடலடி கிழபுறம் 118.5' அடி,தென்வடலடி மேபுறம் 60' அடி, இந்தளவுள்ள தாக்கு – 1,

சைட் எண்.37 — க்கும் (கிழக்கு), ரீ.ச.எண்.81/15 காலையில் வடக்கிலிருந்து தென்கிழக்காக செல்லும் ஓடைக்கும் (மேற்கு), மேலேகண்ட 2 வது அயிட்ட கிழமேல் ரோட்டுக்கும் (வடக்கு) மேலே கண்ட 1வது தாக்குக்கும், ரீ.ச.எண்.81/15 காலையில் வடக்கிலிருந்து தென்கிழக்காக செல்லும் ஓடைக்கும் (தெற்கு) , இதன் மத்தியில் உள்ள இடத்துக்கு அளவு கிழமேலடி தென்புறம் 70.4' அடி, கிழமேலடி வடபுறம் 13.7' அடி தென்வடலடி கிழபுறம் 69.10' அடி, தென்வடலடி மேபுறம் 60' அடி, இந்தளவுள்ள தாக்கு —2

ஆக மேலேகண்ட இரண்டு தாக்குகளுக்கு சேர்ந்து மொத்தம் 5261 சதுரடிகள் கொண்ட பூங்கா இடம் பூராவும்.

<u>அயிட்டம் 8,</u> 3 நெம்பர் பூங்கா இடத்துக்கு செக்குப்பந்தி மற்றும் அளவுகள் விபரம்:-

சைட் எண்.49—க்கும் (கிழக்கு), ரீ.ச.எண்.81/15 காலையில் வடக்கிலிருந்து தென்கிழக்காக செல்லும் ஓடைக்கும் (மேற்கு), ரீ.ச.எண்.80 காலையில் உள்ள ஓடைக்கும் (வடக்கு), மனைப்பிரிவின் தென்புற பகுதியில் உள்ள கிழமேல் ரோட்டுக்கும் தெற்கு இதன் மத்தியில் கிழமேலடி வடபுறம் 19' அடி, கிழமேலடி தென்புரம் 23' அடி, தென்வடலடி கிழபுறமான வடக்கிலிருந்து தெற்காக 16 ¼' அடி, அதன் பின் தெற்காக 49 ½' அடி அதன்பின் தெற்காக 32'8" அடி, தென் வடலடி மேற்புறம் 73 ¼' அடி, இந்தவுள்ள 3047 3/4 சதுரடிகள் கொண்ட பூங்கா இடம் பூராவும்.

ஆக மேலேகண்ட 3 பூங்கா இடங்களுக்கு சேர்ந்து மொத்தம் 9601 ¼' சதுரடிகள் கொண்ட

இடம் பூராவும்.

மேற்படி சொத்தின் வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டு உள்ளது. மேற்படி சொத்து தற்போது ஈரோடு மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 4வது வார்டில் உள்ளது. மேற்கண்ட சாலை இடங்கள் மற்றும் பூங்கா இடங்கள் ஈரோடு மாநகராட்சிக்கு 28.09.2018 அன்று பவானி சார்பதிவாளர் அலுவலகத்தில் தான சாசனம் பத்திர எண் 5391/2018 1 முதல் 34 பக்கங்களை கொண்டது பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள சாலைகள், மற்றும் பூங்காக்களை ஈரோடு மாநகராட்சி எடுத்துக்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

01. அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ2/1268/2017

**150. அனுமதிக்கப்பட்டது.**

**9.** ஈரோடு மாநகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளி கழிப்பிடமற்ற நகரமாக (Open Defecation Free City) அறிவிக்கப்பட்டு மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகத்திடம் சான்று பெற்றுள்ளது. இதன் தொடர்ச்சியாக ODF+ மற்றும் ODF++ சான்று பெற்றிட கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. ஈரோடு மாநகராட்சி ஏற்கனவே Open Defecation Free City (ODF) சான்று பெற்றுள்ளதால் தற்சமயம் அடுத்த நிலையான Open Defecation Free Plus City (ODF+) சான்று பெற்றிட மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகம் வகுத்துள்ள நெறிமுறைகளை பின்பற்றி திறந்தவெளியில் மலம் கழித்தலை தவிர்க்கத் தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும் திறந்தவெளியில் மலம் கழித்தலை தவிர்க்க பள்ளி மாணாக்கர்கள், பொது மக்கள் மற்றும் அனைத்து தரப்பினருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ஈரோடு மாநகராட்சியை Open Defecation Free Plus City (ODF+) என அறிவித்திட மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகம் வகுத்துள்ள நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி 60 வார்டுகளிலும் அனைத்து தரப்பு மக்களிடமும் சுய அறிவிப்பு படிவம் (Self Declaration Forms) பெறப்பட்டுள்ளது. எனவே ஈரோடு மாநகராட்சியை Open Defecation Free Plus City (ODF+) என அறிவிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

ஈரோடு மாநகராட்சியை Open Defecation Free Plus City (ODF+) என அறிவிக்க அனுமதிக்கலாம்.

கோப்பு எண். எச்1 /420/15

**151. அனுமதிக்கப்பட்டது.**

**10.** ஈரோடு மாநகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளி கழிப்பிடமற்ற நகரமாக (Open Defecation Free City) அறிவிக்கப்பட்டு மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகத்திடம் சான்று பெற்றுள்ளது. இதன் தொடர்ச்சியாக நகரினை தூய்மையாக பராமரிக்கவும், நகரில் சேகரமாகும் குப்பைகளை அறிவியல் ரீதியாக கையாளவும் மத்திய மாநில

அரசுகள் வகுத்துள்ள நெறிமுறைகளை பின்பற்றி தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மத்திய அரசு தூய்மையான நகரங்களுக்கு அதன் தூய்மை அடிப்படையில் 1 முதல் 7 வரையிலான நட்சத்திர தரச் சான்று வழங்க முடிவு செய்து அதற்கு தேவையான மற்றும் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகம் மூலம் வெளியிட்டுள்ளது. இதனை தொடர்ந்து ஈரோடு மாநகராட்சியை குப்பை இல்லா நகரமாக (Garbage Free City) அறிவித்து 3 நட்சத்திர தரச் சான்று பெற்றிட மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகம் வகுத்துள்ள நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும் பள்ளி மாணாக்கர்கள், பொது மக்கள் மற்றும் அனைத்து தரப்பினருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ஈரோடு மாநகராட்சியை குப்பை இல்லா நகரமாக (Garbage Free City) அறிவித்து 3 நட்சத்திர தரச் சான்று பெற்றிட மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகம் வகுத்துள்ள நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள படி 60 வார்டுகளிலும் அனைத்து தரப்பு மக்களிடமும் சுய அறிவிப்பு படிவம் ( Self Declaration Forms) பெறப்பட்டுள்ளது. எனவே ஈரோடு மாநகராட்சியை 3 நட்சத்திர தரத்தில் குப்பை இல்லா நகரமாக (Garbage Free City) அறிவிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

ஈரோடு மாநகராட்சியை 3 நட்சத்திர தரத்தில் குப்பை இல்லா நகரமாக (Garbage Free City) அறிவிக்க அனுமதிக்கலாம்.

கோப்பு எண். எச்1 /420/15

**152. அனுமதிக்கப்பட்டது.**

11. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–1 சூரியம்பாளையம் பகுதிக்குட்பட்ட வார்டு எண்.15, க.எண். 24, கணபதிபுரம் வீதியில் ஸ்ரீசமர்தனம் டிரஸ்ட்டு என்ற இலவச சேவை அமைப்பு இயங்கி வரும் கட்டிடத்திற்கு சொத்துவரி விலக்கு அளிக்க கோரி அபூர்வாஸ்ரீ என்பவரிடமிருந்து 01.11.2017 அன்று விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.

மேற்படி கட்டிடத்தில் தரைத்தளத்தில் இயங்கி வரும் ஸ்ரீ சமர்தனம் டிரஸ்ட் என்ற அமைப்பில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு இலவசமாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

எனவே ஈரோடு மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 123 (c) & (e)–ன் அடிப்படையில் மேற்படி கட்டிடத்தின் தரைத்தளத்திற்கு 01.04.2018 முதல் சொத்துவரி விலக்களிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அனுமதி வழங்கலாம். கோப்பு எண். அ1/2614/2017

**153. அனுமதிக்கப்பட்டது.**

12. நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் தற்போது பாதாளசாக்கடை வீட்டு இணைப்புகள் சம்மந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பம் பெற்று பரிசிலிக்கப்பட்டு அதற்கான முன்வைப்புத் தொகை (One Time Deposit) மற்றும் இணைப்பு வழங்குவதற்கான கட்டணம் (Connection Charges) ஆகியவற்றினை செலுத்துமாறு விண்ணப்பதாரருக்கு நகராட்சி / மாநகராட்சிகளில் உரிய அறிவிப்பு / கேட்பு அனுப்பப்பட்டு, சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்கள்

மேற்கூறிய தொகைகளை மாநகராட்சிக்கு செலுத்தியவுடன் பாதாளச்சாக்கடை இணைப்பு வழங்கப்படும் நடைமுறை தற்போது பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த அலுவலக நடைமுறைக்கு ஏற்றவாறு Urban Tree software–ல் மென்பொருள் செயலாக்கம் நடைமுறையில் உள்ளது.

தற்போது மாநகராட்சி பாதாளச் சாக்கடை திட்டங்களை முழுமையான திறனுக்கு இயக்கவும் அதன் பயன் அனைத்து பொதுமக்களுக்கும் உடனடியாகச் சென்று அடையவும் வீட்டு இணைப்புகள் வழங்குவதற்காக அடிக்கடி மாநகராட்சி சாலைகள் வெட்டப்படுவதைத் தவிர்க்கவும் வேண்டி பாதாள சாக்கடை இணைப்பு வழங்குதலில் உள்ள நடைமுறையினை மாற்றியும், மேற்கூறிய முன்வைப்புத் தொகை (Deposit) மற்றும் இணைப்புக் கட்டணத்தினை (connection Charges)சம்பந்தப்பட்ட வீட்டின் சொத்து வரி விதிப்புடன் இணைத்து தவணை முறையில் அதிகபட்சமாக 10 தவணைகளில் வசூல் செய்துகொள்ளலாம், எனவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கூறியவாறு மாநகராட்சிகளில் பாதாளச் சாக்கடை இணைப்பு வழங்கும் நடைமுறையில் முன்வைப்புத் தொகை மற்றும் இணைப்பு வழங்குவதற்கான கட்டணத்தினை சம்பந்தப்பட்ட வீட்டு வரி விதிப்புடன் இணைத்து 10 தவணைகளில் வசூல் செய்ய ஏதுவாகவும், நகரமைப்புகளுக்கான மையப்படுத்தப்பட்ட இணையவழி மென்பொருளில் (UrbanTree Software)-ல் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளவும் உரிய விதிகளைப் பின்பற்றி பாதாளச் சாக்கடை இணைப்பு உபவிதிகளில் திருத்தம் செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

அனுமதி வழங்கலாம்.

(இ2/4814/18)

**154. அனுமதிக்கப்பட்டது.**

13. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஈரோடு, சூரம்பட்டி, வீரப்பன் சத்திரம், காசிபாளையம் மற்றும் பெரிய சேமூர் ஆகிய பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கும் பணி ரூ.209.22 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் மண்டலம்-4க்குட்பட்ட சில பகுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டமும் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் பாதாளச் சாக்கடையில் ஏற்படும் அடைப்புகளை நீக்குவதற்கான JET Roding வாகனம் ஒன்று மட்டுமே பயன்பாட்டில் இருந்து வருகிறது,

இச்சூழ்நிலையில் அரசு முதன்மைச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் 13.08.2018 அன்று சென்னையில் நடைபெற்ற தூய்மை இந்தியாவின் மாநில அளவிலான 7-வது உயர் மட்டக் குழு கூட்டத்தில் Agenda 10(A)யின் படி ஈரோடு மாநகராட்சிக்கு 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு JET Roding Machine ரூ.49.00 இலட்சம் மதிப்பிலும் மற்றும் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு Jet Roding Machine ரூ.16.00 இலட்சம் மதிப்பிலும் தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் கீழ்க்கண்ட நிதி ஆதார விகிதங்களின்படி வாங்கிப் பயன்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் விபரம் வருமாறு.

| | | |
|---|---|---|
| மத்திய அரசு மானியம் (35%) | - | ரூ.22.75 இலட்சம் |
| மாநில அரசு மானியம் (55%) | - | ரூ.35.75 இலட்சம் |
| உள்ளாட்சியின் பங்கு (10%) | - | ரூ. 6.50 இலட்சம் |
| மொத்தம் (100%) | - | ரூ.65.00 இலட்சம் |

எனவே மேற்கண்டவாறு 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு Jet Roding Machine ரூ.49.00 இலட்சம் மதிப்பிலும் மற்றும் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு Jet Roding Machine ரூ.16.00 இலட்சம் மதிப்பிலும் ஆக மொத்தம் இரண்டு Jet Roding Machine-கள் ரூ.65.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்ட நிதி ஆதாரங்களின் படி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இம்மாநகராட்சிக்கு வாங்கிப் பயன்படுத்திக் கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

ஒப்புதல் வழங்கலாம். (இ1/4799/18)

**155. அனுமதிக்கப்பட்டது.**

14. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டத்திற்கு அரசாணை எண் 249 நாள் 11.12.2008 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை மூலம் அனுமதி வழங்கப்பட்டு, அதில் மொத்தம் 5 சிப்பங்களில் சிப்பம் எண் 2 நீங்கலாக 4 சிப்பங்களின் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. இத்திட்டத்தில் இதுவரை செய்து முடிக்கப்பட்ட 64,744 எண்ணிக்கை வீட்டு இணைப்புகளில் சிப்பம்-2 போக மீதி 40,000 எண்ணிக்கை இணைப்புகளுக்கு (மாநகராட்சி கட்டிடங்கள், பள்ளிகள், பொதுக்கழிப்பிடங்கள் உட்பட) வீட்டிணைப்புகள் வழங்க 6 சிப்பங்களாக பணிகள் பிரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளுவதற்கு ந.க.எண். 12013/2018/UGSS-1-1 to 1-6 நாள்: 17.05.2018 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சேப்பாக்கம் சென்னை–5 அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளுவதற்கு ஆகும் மொத்த உத்தேச செலவினத் தொகை ரூ.36.40 கோடிக்கு, இம்மாநகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால், தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO) மூலம் வட்டியில்லா கடனுதவி பெற்று பணி மேற்கொள்ள அனுமதிக்கவும், இணைப்புகள் வழங்கிய பிறகு குடியிருப்பு

உரிமையாளர்களிடம் இருந்து தவணை முறையில் இத்தொகையினையும் மற்றும் முன்வைப்புத் தொகையினையும் பயனீட்டாளர் கட்டணத்துடன் சேர்த்து வசூல் செய்து கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18281/2016/DO1, நாள்: 29.05.2018-ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. அதில் Providing interlink connection between inner premises of resident and chamber for house services connection 7000 Nos (Ward No.21,22,25,26,27,28) சிப்பம்-3 பணிக்கு மதிப்பீடு ரூ. 640.00 இலட்சத்திற்கு, மூடி முத்திரையிடப்பட்ட உறை அல்லது E-Tendering முறையில் இரு உறை அமைப்பில் 12.07.2018 அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. எனவே மேற்கண்ட சிப்பப்பணிக்கு 17.08.2018 அன்று மறுஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், அன்றைய தினம் முன்னாள் பாரத பிரதமர் திரு.வாஜ்பாய் அவர்களின் மறைவையொட்டி அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டதால், அடுத்த வேலை நாளான 20.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1) M/s. Hari Constructions, Tirupur .
2) Thiru. V.P.Azhagaiyan, Tirupur .

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை 27.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுக் கூட்டத்தில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கான விலைப்புள்ளிகளை 28.08.2018 அன்று மதியம் 03.30 மணிக்கு திறக்கப்பட்டதில், பெறப்பட்ட விலைவிகிதங்களை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும்போது பெறப்பட்ட விபரம் கீழ்க்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1 | M/s. Hari Constructions, Tirupur . | (+) 4.82 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | Thiru. V.P.Azhagaiyan, Tirupur . | (+) 5.61 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரர்களும் மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) 4.82 சதவீதம் அதிகமானதாகவும் உள்ள M/s. Hari Constructions, Tirupur.
அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க, இவ்வலுவலக கடிதம் எண்.இ4/2746/2018-1 -ன்படி கேட்க அறிவிப்பு 28.08.2018 அன்று கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 28.08.2018 தேதிய கடிதத்தில் வேலை ஆட்களின் கூலி மற்றும் கட்டுமான பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் தற்போது மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட அதிகமான **(+) 4.82%** சதவீதத்தில் கோரியுள்ள **M/s. Hari Constructions, Tirupur** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மேற்படி திட்டப்பணிக்கு இரண்டாம் அழைப்பில் வரப்பெற்ற தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) 4.82 % அதிகமான விலை விகிதம் உள்ள மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு பொறியர் கையேடு பக்கம் 9, பத்தி எண். 2.7.2. ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடி மாமன்றத்திற்கு வழங்கப்பட்ட

அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளது. இப்பணியின் அவசர அவசியம் கருதி, **M/s. Hari Constructions, Tirupur** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு ஒப்புதல் வழங்கலாம்

கோப்பு எண் : E4/2746/2018-1

**156. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

15. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டத்திற்கு அரசாணை எண் 249 நாள் 11.12.2008 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை மூலம் அனுமதி வழங்கப்பட்டு, அதில் மொத்தம் 5 சிப்பங்களில் சிப்பம் எண் 2 நீங்கலாக 4 சிப்பங்களின் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. இத்திட்டத்தில் இதுவரை செய்து முடிக்கப்பட்ட 64,744 எண்ணிக்கை வீட்டு இணைப்புகளில் சிப்பம்-2 போக மீதி 40,000 எண்ணிக்கை இணைப்புகளுக்கு (மாநகராட்சி கட்டிடங்கள், பள்ளிகள், பொதுக்கழிப்பிடங்கள் உட்பட) வீட்டிணைப்புகள் வழங்க 6 சிப்பங்களாக பணிகள் பிரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளுவதற்கு ந.க.எண். 12013/2018/UGSS-1-1 to 1-6 நாள்: 17.05.2018 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சேப்பாக்கம் சென்னை–5 அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளுவதற்கு ஆகும் மொத்த உத்தேச செலவினத் தொகை ரூ.36.40 கோடிக்கு, இம்மாநகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால், தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO) மூலம் வட்டியில்லா கடனுதவி பெற்று பணி மேற்கொள்ள அனுமதிக்கவும், இணைப்புகள் வழங்கிய பிறகு குடியிருப்பு உரிமையாளர்களிடம் இருந்து தவணை முறையில் இத்தொகையினையும் மற்றும் முன்வைப்புத் தொகையினையும் பயனீட்டாளர் கட்டணத்துடன் சேர்த்து வசூல் செய்து கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பபட்டுள்ளது . மேற்கண்ட பணிகளுக்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18281/2016/DO1, நாள்: 29.05.2018-ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. அதில் Providing interlink connection between inner premises of resident and chamber for house services connection 7000 Nos (Ward No.40,42,43,44,45) சிப்பம்-4 பணிக்கு மதிப்பீடு ரூ. 640.00 இலட்சத்திற்கு, மூடி முத்திரையிடப்பட்ட உறை அல்லது E-Tendering முறையில் இரு உறை அமைப்பில் 12.07.2018 அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. எனவே மேற்கண்ட சிப்பப்பணிக்கு 17.08.2018 அன்று மறுஒப்பந்தப்புள்ளிகள கோரப்பட்டதில், அன்றைய தினம் முன்னாள் பாரத பிரதமர் திரு.வாஜ்பாய் அவர்களின் மறைவையொட்டி அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டதால், அடுத்த வேலை நாளான 20.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1) Thiru. V.P.Azhagaiyan, Tirupur .
2) M/s. Hari Constructions, Tirupur .

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை 27.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுக் கூட்டத்தில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கான விலைப்புள்ளிகளை 28.08.2018 அன்று மதியம் 03.30 மணிக்கு திறக்கப்பட்டதில், பெறப்பட்ட விலைவிகிதங்களை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும்போது பெறப்பட்ட விபரம் கீழ்க்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1 | Thiru.V.P.Azhagaiyan, Tirupur | (+) 5.47 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |

| | | |
|---|---|---|
| 2 | M/s. Hari Constructions, Tirupur | (+) 6.26 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரர்களும் மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) 5.47 சதவீதம் அதிகமானதாகவும் உள்ள Thiru. V.P.Azhagaiyan, Tirupur அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க, இவ்வலுவலக கடிதம் எண்.இ4/2746/2018-2 -ன்படி கேட்க அறிவிப்பு 28.08.2018 அன்று கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 28.08.2018 தேதிய கடிதத்தில் இனம் எண்கள்-3 மற்றும் 4 ஆகியவற்றில் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை விட குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 4.93 % சதவீதம் அதிகமான விலை விகிதம் உள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட அதிகமான **(+) 4.93 %** சதவீதத்தில் கோரியுள்ள **Thiru. V.P.Azhagaiyan, Tirupur** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மேற்படி திட்டப்பணிக்கு இரண்டாம் அழைப்பில் வரப்பெற்ற தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) 4.93 % அதிகமான விலை விகிதம் உள்ள மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு பொறியர் கையேடு பக்கம் 9, பத்தி எண். 2.7.2. ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடி மாமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளது. இப்பணியின் அவசர அவசியம் கருதி, **Thiru. V.P.Azhagaiyan, Tirupur** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண் : E4/2746/2018-2

**157. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**16.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்புத் தொகை ரூ.**3,75,000/–**ஐ மேற்கண்ட பணிகள் முடிவுற்று ஆறு மாதங்களுக்கு மேலானதாலும், தணிக்கைத்தடை ஆட்சேபனை ஏதுமில்லாததாலும், மேற்படி தொகையை திரும்ப வழங்கக் கோரி திருவாளர். SRM Construction அவர்கள் விண்ணப்பித்துள்ளார். விபரம் பின்வருமாறு:-

| வ.எண் | பதிவேடு தொகுப்பு | வருடம் | பக்க எண். | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| வருவாய் மற்றும் மூலதனக் கணக்கு வைப்புத்தொகை | | | | |
| **1.** | RF-Vol-V | **2012–2013** | **98** | **3,75,000.00** |

மேற்கண்ட வைப்புத்தொகை காலங்கடந்த வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதால், காலங்கடந்த வைப்புத் தொகை ரூ.**3,75,000/–**ஐ திருவாளர். SRM Construction அவர்களுக்கு திரும்ப வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-

காலங்கடந்த வைப்புக் கணக்கிலுள்ள வருவாய் நிதி வைப்புத் தொகை ரூ.**3,75,000/–**ஐ திருவாளர். SRM Construction அவர்களுக்கு திருப்பி வழங்க ஆணையாளர் மற்றும் தனி

அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.பி3/3421/2017

**158. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

17. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் தலைமையில் 14.08.2018 தேதியன்று நடைபெற்ற குடிநீர் விநியோகத்தில் DMA Zonation-தொழில்நுட்பத்தினை செயல்படுத்துதல் தொடர்பான ஆய்வு கூட்டத்தில் DMA Zonation தொழில்நுட்பத்தை பற்றியும் அதனை செயல்படுத்துவதால் கிடைக்கும் பலன்களை பற்றியும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேற்கண்ட தொழில்நுட்பத்தினை குடிநீர் விநியோகத்தில் செயல்படுத்துவதன் மூலம் அனைத்து குடியிருப்புகளுக்கும் குறிப்பிட்ட காலஅளவிற்கு சீரான அழுத்தத்தில் தேவையான குடிநீர் வழங்க இயலும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் குறிப்பிட்ட DMA Zonation-ல் விநியோகம் செய்யப்படும் குடிநீரின் அளவை எளிதில் அளவீடு செய்ய இயலும் என்பதால் Non revenue water loss-ஐ குறிப்பிடத்தக்க அளவில் கட்டுபடுத்த முடியும் மற்றும் குடிநீர் விநியோகத்தினை முறையாக கண்காணிக்க இயலும் என்பது உள்ளிட்ட அநேக பலன்கள் மேற்கண்ட கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

ஈரோடு மாநகராட்சியில் தற்போது அம்ருத் திட்டத்தின் கீழ் ரூ.508.15 கோடி மதிப்பீட்டில் தனியான குடிநீர் திட்டம் (Dedicated water Supply Scheme) தொடர்பான பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட குடிநீர் திட்டத்தில் DMA Zonation தொழில்நுட்பத்தை செயல்படுத்தவும், மேற்கண்ட குடிநீர் திட்டத்தில் DMA Zonation தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்துதல் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க தகுந்த ஆலோசகரை நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலம் நியமிக்கவும், மேலும் இம்மாநகராட்சியில் மேற்கண்ட தொழில் நுட்பத்தினை செயல்படுத்துவதற்கான பணிகளை மேற்கொள்ள போதிய நிதி வசதி இல்லை என்பதால் அப்பணியினை மேற்கொள்ள தேவையான நிதியினை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் PPF அல்லது PGDF நிதியிலிருந்து முழு மான்யமாக பெற்று செயல்படுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**

1. அனுமதி வழங்கலாம்.
2. மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்.இ2/4177/2018

**159. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

18. இம்மாநகராட்சி கடை உரிமதாரர்கள் 01.07.2016 முதல் கண்காணிப்பு குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை மிக அதிகமாக உள்ளது என தெரிவித்து கடைகளை ஒப்படைத்துள்ளதால், கடைகளுக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவையினை, அவரவர் செலுத்திய வைப்புத் தொகையிலிருந்து சரிகட்ட 13.03.2018-ம் தேதிய ஆணையர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிற்கு
கொண்டு செல்லப்பட்ட வைப்புத் தொகைகளில் (RF-4018) வாடகை நிலுவைத் தொகைகள், அவரவர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள விபரப்படி சரிக்கட்டலாம். விபரம் பின்வருமாறு:-

**பேருந்து நிலைய வணிக வளாக மேற்கு புற முதல்தளக் கடைகள்:-**

| வ.எண். | பெயர் | கடை எண். | வைப்புத் தொகையிலிருந்து சரிகட்டப்பட வேண்டிய தொகை ரூ. | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு விபரம் (RF-4018) | சரி கட்டப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | திரு. சங்கர் | 3 | 18048.00 | Vol-II, P.No.49, Sl.No.2509 | 18048.00 |
| 2. | திருமதி. பி. கலாமணி | 4 | 8079.00 | Vol-II, P.No.58, Sl.No.2645 | 8079.00 |
| 3. | திரு.ஆர். வேலுச்சாமி | 5 | 5392.00 | Vol-III, P.No.36 | 2340.00 |
| 4. | திரு. ஏ.பி. நல்லசிவம் | 6 | 5930.00 | Vol_II, P.No.54, Sl.No.2584 | 5930.00 |
| 5. | திரு. குணசேகரன் | 8 | 22900.00 | Vol-III, P.No-4 | 7000.00 |
| 6. | திரு. தனபாலன் | 9 | 22098.00 | Vol-II, P.No,47, Sl.No.2480 | 22098.00 |
| 7. | திரு. டி.சி. ஈஸ்வரபூபதி | 10 | 12200.00 | Vol-II, P.No.52, Sl.no.2551 | 12200.00 |
| 8. | திரு.எம்.ஆர். சிவசக்திவேல் | 12 | 9435.00 | Vol-II, P.No.52, Sl.No. 2552 | 9435.00 |
| 9. | திருமதி. பி. கலாமணி, | 15 | 9150.00 | Vol-II, P.No.58, Sl.No.2645, 2646 | 9150.00 |
| 10. | திருமதி. வி. கலாமணி, | 16 | 7538.00 | - | 0 |
| 11. | திரு. எஸ். கந்தவேல் | 18 | 14910.00 | Vol-II, P.No.40, Sl.No.2380 | 14910.00 |
| 12. | திரு. எஸ். கந்தவேல் | 19 | 13480.00 | Vol-II, P.No.40, Sl.No.2386 | 13480.00 |
| 13. | திரு. வெங்கடேஷ் | 21 | 25696.00 | Vol-II, P.No.42, Sl.No.2404 | 25000.00 |
| 14. | திரு. சந்திரசேகரன் | Ist Floor | 3800.00 | - | 0 |
| 15 | திரு. சந்திரசேகரன் | Ist Floor | 2248.00 | - | 0 |
| | | | | மொத்தம் | **147670.00** |

**காவேரி ரோடு முதல்தளக் கடைகள்:-**

| வ.எண். | பெயர் | கடை எண். | வைப்புத் தொகையிலிருந்து சரிகட்டப்பட வேண்டிய தொகை ரூ. | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு விபரம் (RF-4018) | சரி கட்டப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | திரு. சக்திவேல் | 1 | 4424.00 | Vol-II, P.No.41, Sl.No.2399 | 4424.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | திரு.தமிழ்செல்வன் | 2 | 3801.00 | Vol-II, P.No.42, Sl.No.2407 | 3801.00 |
| 3. | திரு. டி.என். சுப்ரமணியன், | 3 | 3801.00 | Vol-II, P.No.42, Sl.No.2406 | 3801.00 |
| 4. | திரு. எஸ். வெள்ளியங்கிரி | 4 | 4528.00 | Vol-II, P.No.42, Sl.No.2408 | 4528.00 |
| 5. | திரு. எஸ். செல்வராஜ் | 5 | 4488.00 | Vol-II, P.No.42, Sl.No. 2409 | 4488.00 |
| 6. | திரு. கே. பாலமுருகன் | 6 | 4296.00 | Vol-II, P.No. 42, Sl.No. 2410 | 4296.00 |
| 7. | திரு. ஆர். கே. சண்முகவேல் | 7 | 4344.00 | Vol-II, P.No.-42, Sl.No.2415 | 4344.00 |
| 8. | திரு. எம். சக்திவேல் | 8 | 4344.00 | Vol-II, P.No.-42, Sl.No.2416 | 4344.00 |
| 9. | திரு. சி.கே. குழந்தைசாமி | 9 | 4617.00 | Vol-II, P.No.42, Sl.No.2411 | 4617.00 |
| 10. | திரு. சி.கே. குழந்தைசாமி | 10 | 6024.00 | Vol-II, P.No.42, Sl.No. 2412 | 6024.00 |
| 11. | திரு. எம். அருள்ஜோதி | 11 | 4518.00 | Vol-II, P.No.43, Sl.No. 2422 | 4518.00 |
| 12. | திரு. புகவதி | 12 | 2480.00 | Vol-II, P.No.80 | 2480.00 |
| 13. | திருமதி.எம். நந்தினி | 13 | 6480.00 | - | 0 |
| 14. | திரு. பி. லோகநாதன் | 14 | 17208.00 | Vol-II, P.No43, Sl.No//2421, P.no.57, sl.No. 2632 | 6156.00 |
| 15. | திரு. ஏ.எம் மீராமைதின் | 15 | 8472.00 | Vol-II, P.No.55, Sl.No. 2600 | 8472.00 |
| 16. | திரு. எம். சாதிக்பாட்சா | 16 | 2510.00 | Vol-II, P.No.42, Sl.No.2414 | 2510.00 |
| | | | | **மொத்தம்** | **68803.00** |

**நேதாஜி ரோடு புதிய வணிக வளாகக் கடைகள்:-**

| வ.எண். | பெயர் | கடை எண். | வைப்புத் தொகையிலிருந்து சரிகட்டப்பட வேண்டிய தொகை ரூ. | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு விபரம் (RF-4018) | சரி கட்டப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | திரு. முத்து கிருஷ்ணன் | 5 | 108560.00 | Vol-III, P.No.61 | 108560.00 |
| 2. | திரு. டி. முத்து கிருஷ்ணன் | 6 | 108560.00 | Vol-III, P.No.57 | 108560.00 |
| 3. | திருமதி. பி. மீனாட்சி | 7 | 125392.00 | Vol-II, P.No.54 | 125392.00 |
| 4. | திருமதி. பி. மீனாட்சி | 12 | 131360.00 | Vol-III-P.No.54 | 131360.00 |
| 5. | திரு. டி. முத்து கிருஷ்ணன் | 14 | 119416.00 | Vol-III, P.No.57 | 119416.00 |
| 6. | திரு. பி. விஷ்ணுவர்தன் | 20 | 119224.00 | Vol-III, P.No.29 | 119224.00 |
| 7. | ஏ. மணி | 21 | 111112.00 | Vol-III, P.No.14 | 111112.00 |
| 8. | என்.எஸ்.மோகன்குமார் | 36 | 137336.00 | Vol-II, P.No.64 | 137336.00 |
| 9. | திரு. பி. விஷ்ணுவர்தன் | 40 | 97168.00 | Vol-III, P.No.75 | 97168.00 |
| 10. | திரு. பி. விஷ்ணுவர்தன் | 43` | 146696.00 | Vol-III, P.No.53,65 | 146696.00 |
| | | | | **மொத்தம்** | **1204824.00** |

| | | |
|---|---|---|
| பேருந்து நிலைய வணிக வளாக மேற்கு புற முதல்தளக் கடைகள்: | | ரூ. 1,47,670.00 |
| காவேரி ரோட்டு முதல்தளக் கடைகள்:- | : | ரூ. 68,803.00 |
| நேதாஜி ரோடு புதிய வணிக வளாகக் கடைகள்:- | : | ரூ.12,04,824.00 |
| | | ------------------- |
| | | ரூ.14,21,297.00 |
| | | ------------------- |

எனவே மேற்கண்ட மனுதாரர்கள் செலுத்தியுள்ள வைப்புத் தொகை ரூ.14,21,297/-ஐ காலங்கடந்த வைப்பு நிதி கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்ட வருவாய் நிதி கணக்கு எண். 4018-லிருந்து மேற்படி கடைகளுக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவையினை சரி செய்து கொள்ள ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அவசர அவசியத்தை முன்னிட்டு ஆணையர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று வைப்புத் தொகை ரூ.14,21,297/-ஐ காலங்கடந்த வைப்பு நிதி கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்ட வருவாய் நிதி கணக்கு எண். 4018-லிருந்து மேற்படி கடைகளுக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவையினை சரி செய்து கொள்ள அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**160. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

19. ஈரோடு மாநகராட்சி மண்டலம் - 2க்குட்பட்ட வார்டு எண் : 26 முனியப்பன் கோவில் வீதியில் உள்ள சாலை பாதாள சாக்கடை பணிகளால் பழுதடைந்து நிலையில் உள்ளதால் போக்குவரத்திற்கு மற்றும் பொதுமக்களுக்கும் இடையூறாக உள்ளது. மேலும் அடிக்கடி போக்குவரத்து நேரிசல் மற்றும் விபத்துக்கள் நடந்த வண்ணம் உள்ளது. எனவே பழுதடைந்த சாலையை செப்பனிட்டு புதிதாக தார்சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.20.00/- லட்சத்திற்கு 06.02.2018 அன்று தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 28.02.2018 அன்று E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளை, அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| வேதநாயகி கன்ஸ்ட்ரக்சன் | (+) 4.95% அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட அதிகம். |
| செல்லியம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட்., | (+) 7.00 % அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தரார்களும் ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) 4.95% சதவீதம் அதிகமானதாகவும், உள்ள வேதநாயகி கன்ஸ்ட்ரக்சன், நிறுவனத்தினரை மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க இவ்வலுவலக கடிதம் எண்: இ1/622/2018 ன் படி 28.02.2018 அன்று கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்தாரர் தனது 03.03.2018 தேதிய கடிதத்தில் இனம் எண்-1,2,3,4,5,6 ல் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை விட குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-) 0.05 % குறைவான விலை விகிதம் உள்ளது.

எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவனாதாகவும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட குறைவாக கோரியுள்ள திருவாளர்கள். வேதநாயகி கன்ஸ்ட்ரக்சன், நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பொது நிதி பணிக்கு முதன் முறையாக வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவனாதாகவும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட (-) **0.05 %** குறைவாக கோரியுள்ள திருவாளர்கள்**. வேதநாயகி கன்ஸ்ட்ரக்சன்,** நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று , பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை எடுத்தமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்: இ1/622/2018

**161. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

20. ஈரோடு மாநகராட்சி மண்டலம் - 2க்குட்பட்ட வார்டு எண் : 26 க்குட்பட்ட பழனிமலை சாலையில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் முழுமையாக செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலையில் வணிக வளாகங்கள் அதிக அளவில் அமைந்துள்ளது. மேலும் இச்சாலை போக்குவரத்து மிகுந்த சாலையாகும். இச்சாலையில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சாலை முழுவதும் பழுதடைந்து உள்ளதால் இப்பகுதி பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தி உள்ளது. எனவே பொது மக்கள் நலன் கருதி மேற்படி சாலையை சீரமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.25.00/- லட்சத்திற்கு 27.03.2018 அன்று தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 18.04.2018 அன்று E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளை, அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| வேதநாயகி கன்ஸ்ட்ரக்சன் | (-) 0.01% அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு. |
| செல்லியம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | (+) 1.98 % அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தரார்களும் ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (-) 0.01% சதவீதம் குறைவானதாகவும், உள்ள வேதநாயகி கன்ஸ்ட்ரக்சன் அவர்கள் மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க இவ்வலுவலக கடிதம் எண்: இ1/0766/2018 ன் படி 18.04.2018 அன்று கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்தாரர் தனது 23.04.2018 தேதிய கடிதத்தில் வேலை ஆட்களின் கூலி மற்றும் கட்டுமான பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் தற்போது மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மற்றும்

அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட குறைவான (-) 0.01% சதவீதத்தில் கோரியுள்ள வேதநாயகி கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்தினர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி பொது நிதி பணிக்கு முதன் முறையாக வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவனாதாகவும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட - **0.01 %** குறைவாக கோரியுள்ள **வேதநாயகி கன்ஸ்ட்ரக்சன்** நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை எடுத்தமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்: இ1/0766/2018

**162. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

21. ஈரோடு மாநகராட்சி மண்டலம் -2 க்குட்பட்ட வார்டு எண்:18 எஸ்.எஸ்.பி நகர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் 1 முதல் 8 வகுப்புகள் நடைபெறுகின்றன. இப்பள்ளியில் சுமார் 145 மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள். மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் போதுமான கழிப்பறை வசதியில்லாத காரணத்தாலும், பள்ளி தலைமை ஆசிரியரின் வேண்டுக்கொளுக்கு இணங்கவும் இப்பள்ளிக்கு கழிப்பறை, சுற்றுச்சுவர் மற்றும் கூடுதல் அபிவிருத்தி பணிகள் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத்தொகை ரூ.46.50/- லட்சத்திற்கு ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண் : இ1/1950/2018

**163. அனுமதிக்கப்பட்டது.**